
# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 10 ஜீன்- 1997 இதழ் -6



னங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு
வருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :
**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்


1. எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து... 1
2. நற்செய்திக்குக் கீழ்ப்படிதல் 10
3. பெண்கள் பகுதி 15
4. விசுவாசத்திலே வாழுதல் 19
5. தேவன் விரும்பும் தலைமையாளர் யார்? 21
6. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் 24
7. பிரசங்கியின் பிரசங்க ஒழுங்கு 27
8. தெசலோனிக்கேயர் 5: 14 29

THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 10 JUNE - 1997 Issue -6

ஆசிரியவுரை

# எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து...

மாபெரும் மனிதனாகிய அப்போஸ்தலன் பவுல், தன் ஊழியத்தின் பாதையில் மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்டார். அவைகளில் இரண்டாவது பயணம் விரிவான அளவில் அமைந்தது. தன்னோடு சீலாவையும் அழைத்துக் கொண்டு, அந்தியோகியா பட்டணத்தில் ஆரம்பித்து, தர்சு பட்டணத்து வழியாக பல நாடுகளுக்கு நற்செய்தியை சுமந்து சென்றார். நாடுகளை மாத்திரம் அல்ல, ஆசியாக் கண்டத்தையும் தாண்டி, ஐரோப்பாவிற்கு சென்று, அங்கு பல பட்டணங்களில் பிராந்திய சபைகளை ஏற்படுத்தினார். அவைகளில் பிரபலமானவை பிலிப்பி, தெசலோனிக்கே, பெரேயா, அத்தேனே, கொரிந்து போன்றவை.

இப்பொழுது தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் இருந்து ஒரு வசனத்தை நாம் ஆராய்ந்து பார்க்க உள்ளோம். தெசலோனிக்கே புறஜாதிகள் நிறைந்த ஒரு பட்டணம். மக்கெதோனியா நாட்டின் முக்கிய நகரம். துறைமுக பட்டணமும் கூட. பவுலின் நாட்களில் இதற்கு சுதந்திர பட்டணம் என்ற அந்தஸ்து இருந்தது. அத்தோடு, ஐரோப்பா கண்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டாம் சபை என்ற பெருமையும் சேர்ந்து கொள்கிறது.

பட்டணத்தின் ஜனத்தொகையில் பெரும்பாலானவர்கள் யூதர்கள். ஆனால் அங்கிருந்த கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களில்

அனைவரும் புறஜாதிகள். (2: 14). யூதர்களின் சரித்திரம் பற்றியோ, பழைய ஏற்பாட்டுக் காரியங்கள் பற்றியோ எதையும் பவுல் தன் நிருபத்தில் குறிப்பிடவில்லையென்பதை கவனிக்க வேண்டும். யூதர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் இங்கு சபையை ஸ்தாபித்தார். ஆவிக்குரிய நிலையில் தான் பெற்றெடுத்த பிள்ளைகளை மீண்டும் காண இரண்டுமுறை முயன்றும், கைகூடாததால், தனது நம்பிக்கைக்கும், அன்பிற்கும் பாத்திரமான, தீமோத்தேயுவை அனுப்பி அவர்களின் காரியங்களை கண்டறிந்து வரும்படியாகப் பணித்தார். பவுல் எதிர்பார்த்ததற்கும் மேலாக, மகிழ்ச்சியைக் கொடுக்கும் செய்திகள் தீமோத்தேயுவிடமிருந்து கிடைத்த படியால் ( 3 : 6 – 12) இதை ஒரு பாராட்டுக் கடிதமாக வடித்துள்ளார்.

அதுமாத்திரமல்ல, அவர்களுக்குள்ளாக இருந்த ஒழுக்க ரீதியான சிறுசிறு பிரச்னைகள், மற்றும் கர்த்தருக்குள்ளாக மரித்துப் போனவர்களின் நிலை பற்றி அவர்களின் குழப்பம் இவைகளுக்கும் இந்த முதல் நிருபத்தில் பதில் கொடுக்கிறார். (4ம் அதிகாரம்) இறுதியாக அவர்களின் பரிசுத்த வாழ்வுக்குத் தேவையான ஆலோசனைகள் சிலவற்றை வழங்குகிறார். (5:12–22). அவைகளில் ஒன்று தான் இம்மாத கட்டுரையை அலங்கரிக்கும் அழகான வசனம். ஆம், **"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்"** (எபே. 5:21) என்பது.

கிறிஸ்தவ மத உலகத்தால் மிகக் கேவலமாகப் புறக்கணிக்கப்பட்ட வசனங்களில் இது தான் பிரதானமானது என்று சொன்னால் அது நிச்சயமாக மிகையாகாது என நம்புகிறேன். ஆம், ஆவிக்குரிய நிலையில் எல்லாவற்றையும் சோதித்துப் பாருங்கள் என்று தேவன் தெளிவான கட்டளையைக் கொடுத்திருக்கும் போது, இக்கட்டளைக்குத் தங்களைக் கீழ்ப்படுத்த கிறிஸ்தவ உலகம் பிடிவாதமாக மறுக்கிறது. எங்களுக்குத் தெரிந்ததே போதும், அல்லது எங்களுடையது தான் சிறந்தது என்ற நினைப்பில் ஒவ்வொருவரும் திளைத்து, ஒரு மனதாக இக்கட்டளையை ஓரங்கட்டுகின்றனர்.

கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக் கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும், இந்தக் கட்டளைக்கு உண்மையாகக் கீழ்ப்படிவார் களானால் கிறிஸ்தவர்களுக்கு இவ்வுலகில் புது மரியாதை நிச்சயம் கிடைக்கும். உலகத்தின் பார்வையில், கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிரிந்து, பரிதாபமாக காட்சி தர வேண்டியதேயில்லை. ஆத்தும ஆதாயப் பணி செய்வதை விட்டு விட்டு கிறிஸ்தவர்களே தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமுமில்லை.

சரி, சோதித்துப் பார்த்தல் என்றால் என்ன? என்று கவனிப்போம். இதை பரீட்சித்துப் பார்த்தல், நிரூபித்துப் பார்த்தல் என்றும் சொல்லலாம். இதற்குண்டான பொருள் என்ன என்பது பற்றி ஒரு ஆங்கில அறிஞர் சொல்வதைக் கவனியுங்கள். **"முற்றிலும் உண்மையென ஏற்றுக் கொள்ளப்படும் அளவுக்கு, தேவையான சாட்சியங்களைக் கொண்டு விளக்குதல்".** இது மிகச் சிறந்த விளக்கம் என்பதில் சந்தேகமில்லை. தன்னுடைய பிள்ளைகள் எதையும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளாமல், எல்லாவற்றையும் காரண காரியங்களோடு செய்ய வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். **"பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.** (I யோவா. 4 : 1). **"அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும் . . .** (வெளி. 2 : 2) என்று வசனங்கள் உள்ளது. ஆக, தேவன் சோதித்துப் பார்ப்பது அவசியம் என்றே கூறுகிறார்.

அப்படியானால் எப்படிச் சோதிப்பது, எதை ஆதாரமாக வைத்துச் சோதிப்பது என்ற கேள்வி எழுகிறது. மார்க்கரீதியாக மிகப் பெரும்பாலோர் எதையுமே சோதித்துப் பார்ப்பதில்லை. ஆனால், மிகச் சிலர் சோதித்துப் பார்க்கும் வேலையைச் செய்கின்றனர். ஆனால், அவர்களும் போதுமான அல்லது தேவையான அளவு சோதித்து அதில் வெற்றி பெறுவதில்லை. ஏனெனில் சோதனைக்கு ஆதாரமாக, தகுதியில்லாதவைகளையும், சம்பந்தமில்லாதவைகளையும், தேவ அங்கீகாரம் பெறாதவைகளையும் எடுத்துக் கொள்கின்றனர்.

இப்பொழுது, ஆவிக்குரிய காரியத்தில் சோதித்துப் பார்ப்பதற்கு எதை ஆதாரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பார்க்கு முன், எதை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று முதலில் காண்போம்.

## I) உணர்வுகள் சரியான ஆதாரம் அல்ல :

அநேகர் தங்கள் உள் உணர்வுகளையும், இருதயத்தின் எண்ணங்களையும் ஆதாரமாகக் கொண்டு, ஒரு காரியம் சரியா, தவறா என்று தீர்மானிக்கின்றனர். இது எப்படி நியாயமாகுமென்று தெரியவில்லை. தேவனிடத்திலிருந்து மிகுந்த ஞானத்தை ஆசீர்வாதமாகப் பெற்றுக் கொண்ட சாலமோன் ராஜா சொல்வதை இங்கே கொஞ்சம் கவனியுங்கள். **"தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்"** (நீதி. 28 : 26) என்று கூறுகிறான். ஏனெனில், இருதயம் மகா கேடும் திருக்குமுள்ளதாய் இருக்கிறது. (எரே. 17:9)

பரிசேயனும், ஆயக்காரனும் ஜெபித்த விதத்தைக் குறித்து இயேசு ஒரு உவமை சொன்னார். (லூக். 18 : 9 – 14). அதிலே, பரிசேயன் தன் இருதயத்தின் நினைவுகளின்படி, தன் உள் உணர்வுகளின்படி தன்னை ஒரு முழு நீதிமானென்று எண்ணியே ஜெபித்தான். அவனுடைய நம்பிக்கையிலே அவனுக்குத் துளியும் சந்தேகமிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அங்கே இயேசு கொடுத்த தீர்ப்பு என்ன?

தன் உணர்வுகளினடிப்படையில் பீற்றிக் கொண்ட பரிசேயனல்ல, தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத் துணிவில்லாமல் பயந்து நடுங்கி நின்று ஜெபித்த அந்த ஆயக்காரனே, நீதிமான் என்று தீர்க்கப்பட்டான்.

ஆகவே, நம் உள் உணர்வுகளை ஆதாரமாக வைத்து நம்முடைய தேவ காரியங்களைத் தீர்மானிப்பது தவறு, தவறு. ஒருவேளை, இதை வாசிக்கும் சிலாக்கியம் பெற்ற நாம் இப்படிப்பட்டதான தவறுகளை அறிந்தோ, அறியாமலோ செய்து கொண்டிருப்போமானால், இப்பொழுதே நம்மைத் திருத்திக் கொள்வோம்.

## II) பெற்றோர்கள் சரியான ஆதாரம் அல்ல

மார்க்க உலகில் கணிசமானபேர் இத்தவறை செய்கின்றனர். ஏதோ, தங்களைப் பெற்றெடுத்தவர்களுக்கு தாங்கள் காட்டும் மிகச் சிறந்த மரியாதை இது தான் எனவும் எண்ணுகின்றனர். அவர்கள் எதை நம்புகிறார்களோ அதை நம்புவது. அவர்கள் எதைச் செய்கிறார்களோ அதைச் செய்வது. அவர்கள் எதைப் பின்பற்றுகிறார்களோ அதைப் பின்பற்றுவது. இந்த வாதம் எப்படிச் சரியாகுமென்றும் எனக்குத் தெரியவில்லை.

ஒருவேளை இந்தவாதம் சரியாக இருக்குமானால், "உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மத். 28:19) என்று இயேசு கொடுத்த கட்டளை அர்த்தமற்றதாகவே இருக்கும். ஆம், ஒவ்வொருவரும் பெற்றோர்களைப் பின்பற்றுவது தான் சிறந்தது என எண்ணினால், பிரசங்கிப்பதால் பொருள் ஏதுமில்லை. பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியும் காரியத்தில் வேதத்தின் போதனையைப் பாருங்கள். "பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் **கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்.** (எபே. 6 : 1).

ஆம், **கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்,** இது நியாயம் என்று சொல்லியிருப்பதை கூர்ந்து கவனிப்பது அவசியம். பெற்றோர்களின் ஆலோசனைகளும், அவர்களின் முன்மாதிரிகளும் **கர்த்தருக்குள் சரியில்லாமல் இருக்குமானால்,** அதற்கு நாம் கீழ்ப்படிவது **"அநியாயம்"**.

இதிலே எந்த சந்தேகமும் வேண்டாம். "உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக . . . ." என்று சொல்லும் அதே வேதம் தான் இந்தக் கருத்தையும் சொல்லுகிறது.

புதிய ஏற்பாட்டில் முதல் இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான், தான் கல்லெறிந்து கொல்லப்படுவதற்கு முன் ஒரு மகா பிரசங்கத்தை நிகழ்த்தினான். அதில் ஒரு வசனம் இப்படியாக வருகிறது. **"வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்"** (அப். 7 : 51) என்று.

அங்கே, அவர்களின் செயல்பாட்டை ஸ்தேவான் குறை கூறினான். உங்கள் பிதாக்களைப் போலவே, அதாவது உங்கள் முன்னோர்களைப் போலவே உங்கள் பெற்றோர்களைப் போலவே நீங்களும் செய்கிறீர்களென்று. அங்கே தங்கள் பெற்றோர்களைப் போலவே செயல்பட்டது, தேவனுடைய பார்வையில் நியாயமாக இருந்ததா? சொல்லுங்கள். ஒருவேளை அங்கே கூடியிருந்த மக்களுக்கு **தங்கள் பெற்றோர்களைப் போலவே** செய்கிறோம் என்ற திருப்தியும், பெருமையும் இருந்திருக்கலாம். ஆனால், அதை தேவன் தன்னுடைய எழுத்துக்களில் சரியென்று அங்கீகரித்தாரா? இல்லையே.

ஆகவே, நம்முடைய பக்திக்குண்டான காரியங்களில் நாம் பின்பற்றுவதற்கு நம்முடைய பெற்றோர்கள் சரியான ஆதாரம் அல்ல. மரியாதை என்ற போர்வையில் நாம் யாராவது இந்த தவறுக்குள் ஒளிந்து கொண்டிருப்போமானால் உடனடியாக வெளியே வருவது அவசியம்.

## III) வெகுஜன ஆதரவு சரியான ஆதாரம் அல்ல

பக்திக்குண்டான பல பிழைகள் தங்கு தடையின்றி வெற்றி நடை போடுவதற்குக் காரணமே, தவறுகளுக்குக் கிடைக்கும் வெகுஜன ஆதரவுதான். ஒரு காரியம் சரியா, தவறா என்று தீர்மானிப்பதற்கு, அதன் உண்மைத் தன்மை எந்தளவு இருக்கிறது என்று பார்க்கும் காலம் மலையேறி, அதற்கு ஆதரவாக எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று பார்க்கும் காலம் வந்துவிட்டது. மார்க்க சீரழிவிற்கு இதைவிடச் சிறந்த காரணம் ஏதாவது இருக்க முடியுமா? மெய்ப்பக்திக்குண்டான வழியை மீட்டமைப்பதற்கு பெரும்பாடுபட வேண்டிய காலத்தில் நாம் நிற்கிறோம்.

வேதம் என்ன சொல்லுகிறதென்று கவனியுங்கள். **"தீமை செய்ய திரளான போர்களைப் பின்பற்றாதிருப்பாயாக"** (யாத். 23 : 2) என்று. ஒரு காரியத்தை எத்தனை பேர் செய்கிறார்கள் என்பது முக்கியமல்ல. எப்படிச்

செய்கிறார்கள் என்பதே முக்கியம். பெரும்பான்மையோர் செய்வது தான் நியாயம் என்றால், ஆதியிலே தேவன் நீரினால் உலகத்தை அழித்ததே தவறுதான் (ஆதி. 6) பெரும்பான்மையோர் செய்வது தான் நியாயம் என்றால், அன்று இயேசுவை, சிலுவையில் அறையும் என்றும், பரபாசை விடுதலை பண்ணும் என்றும் யூதர்கள் கூச்சலிட்டதும் நியாயம் தான். (லூக் 23 : 18)

அன்பரே! நம்முடைய **"பெரும்பான்மை கணக்கு"** எவ்வளவு விபரீதமான முடிவுக்கு இழுத்துச் செல்கிறது பார்த்தீர்களா? பெரும்பான்மை கணக்குப் பார்த்து பெரும் பாதகத்துக்கு ஆளாக வேண்டாம். இன்றைக்கு கிறிஸ்தவ உலகிலே பெரும்பான்மை, மற்றும் வெகுஜன ஆதரவு என்ற கணக்கு வெளிப்படையாகப் பார்க்கப்படுகிறது. யாருக்கும் அதில் வெட்கமில்லை. ஏனெனில் உலகத்தில் அதற்குக் கிடைக்கும் மரியாதை தான். திரளாக இருக்கும் கூட்டத்தில் நானும் ஒருவன் என்று சொல்வதற்கு கிறிஸ்தவர்கள் ஆளாய்ப் பறக்கிறார்கள்.

வேண்டாம். தனி ஒருவனாய் இருந்தாலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற ஒப்புக் கொடுப்போம். நிறையபேர் செய்கிறார்கள் என்பதற்காக ஒரு காரியம் நியாயமாகிவிடாது. ஆகவே, நம்முடைய பக்திக்குண்டான, ஆவிக்குரிய காரியங்களில் முடிவெடுக்க வெகுஜன ஆதரவு சரியான ஆதாரம் அல்ல.

## IV) மனசாட்சி சரியான ஆதாரம் அல்ல

மனிதனுக்கு தேவனிடமிருந்து கிடைத்த மிகச் சிறந்த ஈவுகளில் ஒன்று தான் **"மனசாட்சியாகும்"**. ஆனால், இந்த மனசாட்சி எப்பொழுதும், எல்லோரையும் நியாயத்திற்கு வழி நடத்துகிறது என்று சொல்லமுடியாது. மனசாட்சியை எப்படி நாம் பயிற்றுவிக்கிறோமோ அதனடிப்படையில் தான் அது செயல்படும்.

அப்போஸ்தலன் பவுல் தன் எழுத்துக்களில் இதுபற்றி அழகாகக் குறிப்பிட்டுள்ளார். "சுத்தமுள்ளவர்களுக்கு சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும், அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய **புத்தியும் மனசாட்சியும்** அசுத்தமாயிருக்கும். (தீத். 1 : 15). அதாவது, **அவிசுவாசமுள்ளவர்களுக்கு மனசாட்சி அசுத்தமாயிருக்குமென்று கூறுகிறார்.**

அப்படியானால் யார் அவிசுவாசி? விசுவாசம் இல்லாதவன்தான். யார்மீது விசுவாசம் இல்லாதவன்? எதன் மீது விசுவாசம் இல்லாதவன்? தேவன் மீதும், அவருடைய வார்த்தைகளின் மீதும் விசுவாசம்

இல்லாதவன். இதிலிருந்து சுத்த மனசாட்சியைக் கொடுக்கும் வல்லமை எதற்குண்டென்று விளங்குகிறதா? எதற்கு? சொல்லுங்கள். **தேவ வார்த்தைக்கு. ஆம் வேத வசனத்துக்கு.** வேத வசனங்களைக் கொண்டு நாம் மனச்சாட்சியைப் பயிற்றுவித்தால் அது சுத்தமானதாகவும், நல்ல வழிகாட்டியாகவும் இருக்கும்.

வேத வசனத்திற்கு நாம் நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுக்காத நிலையில் நாம் மனச்சாட்சியின்படி நடக்கிறேன் என்பது சரியானவாதமாக இருக்க முடியாது. ஆவிக்குரிய காரியங்களை, மனசாட்சியின் படியாக அணுகி ஒரு தீர்வுக்கு வருவது சரியாகாது. ஆகவே மனசாட்சி என்பதும் ஒரு சரியான ஆதாரம் அல்ல. அல்ல.

இருதயத்தின் எண்ணங்களும் சரியல்ல, பெற்றோர்களின் முன் மாதிரியும் தவறு, வெகுஜன அபிப்ராயமும் மோசம், மனசாட்சியும் பிழை செய்யக் கூடியது என்றால், பின் வேறு எதைத்தான் ஆதாரமாகக் கொள்வது என்று அங்கலாய்க்கிறீர்களா? பொறுங்கள்.

## V) வேதாகமம் மாத்திரமே சரியான ஆதாரம்

வேத வாக்கியங்கள் மாத்திரமே தேவ ஆவியினால் ஏவப்பட்டது. (II தீ.மு. 3 : 16, 17) உலகத்திலுள்ள வேறெந்த நூலுக்கும் இந்த அந்தஸ்து இல்லை. இல்லவே இல்லை. வேத வாக்கியங்கள் (தீர்க்கதரிசனமானது) ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. (II பேது. 1 : 20, 21). மேலும் தேவ பக்திக்குத் தேவையான அனைத்தும் வேத வசனங்களில் உண்டு. (II பேது. 1 : 3) இவை தேவனுடைய வார்த்தைகள் (I பேது 4 : 11). இன்னும் பேதுரு இதை ஆவிக்குரிய ஆகாரம் என்று கூறுகிறான். (I பேது. 2 : 2-3). ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது என சங்கீதக் காரன் கூறுகிறான் (சங். 19:7). வசனம் நம்மை பரிசுத்தப்படுத்துகிறது. (யோவா. 17:17) விசுவாசத்தை உண்டாக்குகிறது. (ரோம. 10 : 17). ஒருவனை பாவத்திலிருந்து விடுதலையாக்குகிறது. (யோவா. 8 : 32. இன்னும் மேலே சென்று ஒருவனை பூரணப்படுத்துகிறது. (II தீ.மு. 3 : 15-17). இப்பொழுது சொல்லுங்கள் வேதாகமம் சரியான ஆதாரமா? இல்லையா?

இது சரி என்று சொன்னால், மத உலகத்தில் உலாவரும் பலவிதமான நம்பிக்கைகளும், கொள்கைகளும் எந்த ஆதாரத்தில் எழுந்தவை. எல்லாம் வேதவசனங்களைக் கொண்டு என்றால் அவைகளுக்கு ஆதாரம் எங்கே? வேதாகமம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என்பதை அநேகர் இன்று மிகத் தவறாகப் புரிந்து வைத்துள்ளனர். அதற்கு நிறையபேர் கொடுக்கும் விளக்கம் அது அப்படியும் பேசும் இப்படியும் பேசும் என்பது. இப்படிச் சொல்லி,

வேதாகமத்திற்கு ஆதரவாக பேசுகிறோம் என எண்ணிக்கொண்டு, வேத வசனங்களை தங்களையுமறியாமல் அவமானப்படுத்துகின்றனர்.

எப்படி வேண்டுமானாலும் பேசும் ஒருவனை நாம் நல்லவனென்று சொல்வதில்லை. நியாயஸ்தன் என்று நினைப்பதில்லை. இது உண்மையானால், எப்படி வேண்டுமானாலும் பேசும் வேதாகமம் எப்படி நல்லதாக இருக்கமுடியும்? அதைக் கொடுத்த தேவன் எப்படி நல்லவராக இருக்க முடியும்? சிந்தியுங்கள். இன்னும் சிலர் வேதத்தில் எல்லாவற்றுக்கும் ஆதாரம் உண்டு என்பர். அதாவது, வித்தியாசமாகப் பின்பற்றப்படும் எல்லாக் கொள்கைகளுக்கும் ஆதாரம் உண்டு என்பர். இவைகளையெல்லாம் தெரிந்து தான் பேசுகிறார்களா? அல்லது தெரியாமல் பேசுகிறார்களா என்று விளங்கவில்லை.

எல்லாவற்றிற்கும் ஆதாரம் இருக்கிறதென்றால் நாம் எதையுமே சோதித்துப் பார்க்கத் தேவையில்லைதானே. எதை வேண்டுமானாலும் தாராளமாகப் பின்பற்றலாம் தானே. இப்படி, பேசுவது உண்மையானால், ஏன் பவுலடியார், **“எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்”** என்று தான் நேசிக்கும் மக்களுக்கு அறிவுறுத்துகிறார். இவைகள் பவுலின் எழுத்துக்களல்லவே. பரிசுத்த ஆவியானவர் தானே இவைகளை ஏவினார். அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் விவரம் தெரியாமல் வெளிப்படுத்திவிட்டாரா? சொல்லுங்கள். நீங்களே நிதானித்துப் பாருங்கள்.

அருமையானவர்களே! போலிகளின் பின்னால் போதை மயக்கத்தில் திரிகிறவனைப் போல அலைந்து திரிந்து, **“அந்நாளில்”** அதாவது நியாயத் தீர்ப்பின் நாளில் “ஐயோ” இப்படியாகிவிட்டதே என்று கதறினாலும் கருணை என்பது இருக்காது. வாழும் வாழ்க்கை ஒரு முறைதான். நித்திய அழிவிலிருந்து நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், அப்போஸ்தலன் பவுல், பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு கொரிந்தியருக்கு எழுதின ஒரு வசனத்துக்கு நாம் நம்மைக் கீழ்ப்படுத்தியே ஆக வேண்டும். **“நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ வென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுக்கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்கள் அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்** (II கொரி. 13 : 5).

பரீட்சித்துப் பார்க்கும் பழக்கம் நம்மிடையே இல்லாதபடியால் தான், அநேகர் இன்று எதை வேண்டுமானாலும் பிரசங்கிக்கத் துணிந்திருக்கிறார்கள். பல பொய்யான உபதேசங்கள் நமக்கு மத்தியில் தாராளமாக

வலம் வந்து கொண்டுள்ளது. இரட்சிப்புக்கு சிலர் விசுவாசம் மட்டும் போதும் என்கின்றனர். இன்னும் சிலர் இரட்சிப்புக்குப்பின் ஞானஸ்நானம் என்று சொல்கின்றனர். வேறு சிலர் சபை ஒருவனை இரட்சிக்காது. ஆகவே நாம் விரும்பும் சபையில் அங்கமாகிக் கொள்ளலாம் எனக் கூறுகின்றனர். இப்படி இன்னும் வசனத்திற்கு ஒவ்வாத ஏராளமான உபதேசங்கள் உண்டு. இவைகளுக்கெல்லாம் வேத ஆதாரம் எங்கே உள்ளது? ஏன் இப்படிப்பட்ட தவறான போதனைகளை கண்டும் காணாமலும் இருக்கிறோம்? எப்படி இவைகளை கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக் கொள்கிறோம்? என்ன காரணம் : "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் படித்துக் கொள்ளுங்கள்" என்ற தேவ கட்டளையைப் புறக்கணிப்பதால் வரும் தீமைகள் இவை. இத்தீமையின் விளைவுகள் உலகத்தோடு முடிந்து போவதாயிருந்தால், சரி போகட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால் வேதம், இதன் விளைவு **நித்தியத்தைப் பாதிக்கக் கூடியது** என்று சொல்கிறது. ஆகவே எச்சரிக்கை தேவை. விழிப்பு அவசியம்.

இங்கே கவனியுங்கள். பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்கிக் கொள்வதற்கு வேத வசனங்களின் ஆதாரங்களோடு நமக்கு கிடைக்கும் "இரட்சிப்பின் படிகள்". இந்தமாதிரியாக நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா என்று உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள். ஒருவேளை நான் முழுகித்தான் ஞானஸ்நானம் பெற்றேன் என்று பொய் சமாதானம் செய்து மீண்டும் ஏமாந்துவிடாதீர்கள். ஞானஸ்நானத்திற்கு முன்பாக இந்தப் படிகளையெல்லாம் பின்பற்றினீர்களா என்று சோதித்துப் பாருங்கள்.

1. விசுவாசம் (எபி. 11 : 6, யோவா 8 : 21 – 24)
2. மனந்திரும்புதல் (லூக். 13 : 3, அப். 2 : 38)
3. அறிக்கையிடுதல் (அப். 8 : 37, மத். 10 : 32, 33)
4. ஞானஸ்நானம் (மாற். 16 : 16, அப். 2 : 38, I பேது. 3 : 21)

ஒருவேளை இந்தமுறையாக நீங்கள் இரட்சிக்கப்படாமல் இருப்பீர்களானால், உடனடியாக இரட்சிப்பின் அனுபவத்துக்குள் வர உங்களிடம் மன்றாடுகிறேன்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**EZS ராஜநாயகம்.**

# நற்செய்திக்குக் கீழ்ப்படிதல்

நற்செய்திக்கு ஒருவர் கீழ்ப்படிய முடியுமா? அது சாத்தியமல்ல என்று சொல்லக் கூடியவர்கள் உண்டு. ஆனால், வேதாகமம் அதற்கு மாறாகப் போதிக்கிறது. நற்செய்தியின் உண்மைகள் ஏற்கனவே அறியப்பட்டிருக்கின்றன. எனவே அவற்றை நாம் விசுவாசிக்க வேண்டும். அடுத்து, நற்செய்தியின் கட்டளைகள் இருக்கின்றன. பின்னர் வரும் பாடங்களில் அவைகளைப் பற்றி பார்ப்போம். அவைகளுக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும்.

நற்செய்தியின் உண்மைகளை மீண்டும் வலியுறுத்திக் கூறி, இதைத் தொடர்வோம். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு என அவற்றை பட்டியலிட்டு 1 கொரிந்தியர் 15 : 1–4 வசனங்களில் பவுல் கூறினார். ஆனால், கீழ்ப்படிதலுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? நிறைய சம்பந்தமிருக்கிறது என்பதை நாம் காண்போம். ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலர் எழுதுவதைக் கவனியுங்கள் : "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர் 6 : 17 – 18). அவர்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தனர்; பின்னர் நீதிக்கு அடிமைகளாக மாறினார்கள் என்பதை தயவுசெய்து கவனியுங்கள். இந்த மாற்றத்தை எது கொண்டு வந்தது? "அவர்களுக்கு அளிக்கப்பட்ட உபதேசத்திற்கு இதய பூர்வமாக கீழ்ப்படிந்தனர்". வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தனர். ஆனால், உண்மைகளுக்கு அவர்கள் எவ்விதம் கீழ்ப்படிய முடியும்? அவர்களால் அது முடியாது; அவர்கள் அதைச் செய்யவுமில்லை. கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு என்பதையே அந்த உபதேசம் இங்கே குறிப்பிடுகிறது. மீண்டும் கவனியுங்கள் : அவர்கள் அந்த உபதேசத்தின் ஒரு சாயலுக்குக் கீழ்ப்படிந்தனர். அவ்வாறு செய்ததின் மூலம், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மரித்து, திருமுழுக்குத் தண்ணீரில் அவர்களுடைய கர்த்தரோடு அடக்கம் செய்யப்பட்டு, தண்ணீராகிய கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தனர். ரோமர் 6ம் அதிகாரத்தின் முன் பகுதியில் இவை அனைத்தும் காணப்படுகின்றன. அவற்றைப் படிப்போம் : "ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை

நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனிதன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். "என்வே, அவர்கள் கீழ்ப்படிந்திருந்த உபதேசத்தின் சாயல் அதுவே. இதுதான் ரோமர் 6 : 17, 18 வசனங்களில் பின்னர் பவுலால் குறிப்பிட்டுக் காட்டப்பட்டது. அது மட்டுமல்ல, கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஒருவன் கீழ்ப்படியும் ஒவ்வொருவேளையும், இவ்விதமான உபதேசச் சாயலுக்கு அவன் கீழ்ப்படிகிறான். அல்லது, கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை தனது செயல் மூலமாக படம் பிடித்துக் காட்டுகிறான்.

தொடர்ந்து, நற்செய்தியின் கட்டளைகள் என்னவென்றும், அவற்றிற்கு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றுடன் எவ்வித உறவு உள்ளது என்றும் நாம் காண விரும்புகிறோம் : " . . நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 15, 16) என அப்போஸ்தலர்களுக்கு கர்த்தரே கட்டளையிட்டார். இக்கட்டளையானது மத்தேயு சுவிசேஷத்தில் கீழ்க்கண்டபடி பதிவு செய்யப்பட்டிருக்கிறது : "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். "(மத்.28 : 19, 20). நற்செய்தி போதிக்கப்பட வேண்டும் என கர்த்தர் கட்டளையிடுவதை இங்கே நீங்கள் காண முடிகிறது. அது மட்டுமல்ல, தனிப்பட்ட மனிதன் இரட்சிக்கப்பட சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தையும் அவர் தொடர்ந்து கூறுவதைப் பார்க்க

முடிகிறது. பின்னர், கர்த்தரின் உத்தரவுகளுக்கு ஏற்றபடி நடப்பதற்காக, எருசலேமில் அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் போதிப்பதைக் காண்கிறோம். (அப். 2).

முதல் முதலாக, இயேசு உண்மையிலேயே தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்க ஆதாரங்களையும் காட்சிகளையும் தருகின்றனர். மக்கள் இதை நம்பி ஏற்றுக் கொண்ட பின்னர், " . . . சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? "(அப். 2 : 37) என்ற கேள்வியை அவர்கள் கேட்பதாக பதிவேடுகள் கூறுகின்றன. மேலுமாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 9ம் அதிகாரத்தில், கர்த்தர் சவுலுக்குத் தோன்றிய போது, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று அவர் அறிய விரும்பினார். நகரத்திற்குள் செல், அங்கே உனக்கு அது அறிவிக்கப்படும் என்று கர்த்தர் அவரிடத்தில் சொன்னார். பின்னர் அனனியா அங்கு வந்து அதைத்தான் செய்தான். (அப். 22 : 16). அப்போஸ்தலருடைய நடபடிகள் 8ம் அதிகாரத்தில், எத்தியோப்பிய மந்திரிக்கு பிலிப்பு கிறிஸ்துவைப் போதித்தான் என்றும், மந்திரி திருமுழுக்குப் பெற விரும்பினான் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அதைத் தொடர்ந்து நடைபெற்ற உரையாடலைக் கவனியுங்கள் : "அதற்குப் பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் : இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்". (அப். 8 : 37 – 39). இப்போது, நற்செய்தியின் கட்டளைகள் என்ன? முதலாவதாக, நற்செய்தி போதிக்கப்படுவதை ஒருவன் கேட்க வேண்டும் என்பது மிக அவசியம். அடுத்து, ஒருவர் தேவனையும், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும் விசுவாசிக்க வேண்டும். மூன்றாவதாக, அவனுடைய சகல பாவங்களுக்காகவும் அவன் மனஸ்தாபப்பட வேண்டும். நான்காவதாக, இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதை வாயினால் அறிக்கை செய்ய வேண்டும். ஐந்தாவதாக, பாவங்கள் மன்னிக்கப்பட, தண்ணீரில் அடக்கம் செய்யப்படும் திருமுழுக்கு வருகிறது.

இந்த எண்ணங்களுடன் தொடர்ந்து, நற்செய்தியின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது, ஒருவன் தனது பாவங்களுக்கு

மரிக்கிறான். அதாவது, அவன் நற்செய்தியைக் கேட்டிருக்கிறான், தனது சகல பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு அல்லது அவற்றிலிருந்து மனந்திரும்பும் அளவிற்கு கர்த்தரை விசுவாசிக்க அவன் வந்திருக்கிறான் என்பதாகும். இப்படியாக, இது பாவங்களின் மரணத்தை அடையாளங் காட்டுகிறது. பின்னர், மரணத்தைத் தொடர்ந்து அடக்கம் வருகிறது. அது தண்ணீரில் அடக்கம் செய்யப்படுவது. அடக்கம் செய்யும் செயலை நடத்துவதற்காக பிலிப்பும் மந்திரியும் தண்ணீருக்குள் சென்றனர் என்பதை நாம் ஏற்கனவே கவனித்தோம். திருமுழுக்கு தண்ணீரில் செய்யப்படும் ஒரு அடக்கம் என்பதாக கொலோசெயர் 2 : 12ம் வசனமும், ரோமர் 6 : 4ம் வசனமும் நமக்குச் சொல்லுகின்றன. பின்னர், அடக்கத்திற்கு அடுத்து உயிர்ப்பு வருகிறது. பிலிப்பும் மந்திரியும் தண்ணீரிலிருந்து வெளியே வந்தனர் என அப்போஸ்தலருடைய நடபடிகள் 8ம் அதிகாரம் கூறுகிறது. ரோமர் 6ம் அதிகாரம் கூட, ஒரு அடக்கம், ஒரு உயிர்ப்பு பற்றியும், பின்னர் புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளுவது பற்றியும் கூறுகிறது. இப்படியாக, ஒருவன் இந்த எளிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது, தனிப்பட்ட மனிதன் கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை அடையாளமாகக் காட்டுகிறான். அது மட்டுமல்ல, கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் இதேபோன்று அந்த மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறான்.

யோவான் 3 : 3– 5 வசனங்களில், தண்ணீராலும் ஆவியாலும் பிறப்பது பற்றி கிறிஸ்து பேசுகிறார். இதே காரியத்தை வேறு விதமாகக் கூறும் வழிதான் இது. ஏனெனில், தண்ணீரில் ஒருவன் அடக்கம் செய்யப்படும்போது, தொடர்ந்து தண்ணீராகிய கல்லறையிலிருந்து ஒரு உயிர்ப்பு வருகிறது. எனவே, அவன் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக இருக்கிறான், புதிய ஜீவனுள்ளவனாக நடந்து கொள்ளுகிறாள். (2 கொரி. 5:17).

கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்; கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோர் அதற்கேற்ற பலன்களை அடைவர். ஆனால் நற்செய்தியின் ஒரு கட்டளைகூட தவிர்க்கக்கூடியதாகவோ அல்லது தேவையற்றதாகவோ இல்லை என்ற உண்மையை தயவு செய்து நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படிந்தால் மட்டுமே, கர்த்தர் ஒருவனை இரட்சிக்கிறார், தமது சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார், அவருடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அருளுகின்ற நித்திய வாழ்வின் நம்பிக்கையையும் அளிக்கிறார்.

இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள, கணக்கு ஒப்புவிக்கும் வயதடைந்த சகலரும் நற்செய்திக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதும், நற்செய்தி சகல மக்களுக்காகவும் தரப்பட்டுள்ளது என்பதும் ஒருபுறமிருக்க, "ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படிய வில்லை" என பவுல் புலம்புகிறார். (ரோமர் 10 : 16). ஒருவன் நற்செய்திக்குக் கீழ்ப்படிவது மட்டுமல்ல, இரட்சிக்கப்பட்ட ஒருவன் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதும் அதிலே அடங்கியிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், கீழ்ப்படியாதவர்களின் கதி என்ன? இது பற்றி அவர் கூறுகிறார் : "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத வர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்த படியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலம் ஆச்சரியப் படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்". (2 தெசலோ். 1: 7–10).

எனவே, இதின் பிரகாரமாக, தேவனை அறியாதிருப்பது ஒரு புறமும், நற்செய்திக்குக் கீழ்ப்படிய மறுப்பது மறுபுறமுமாக இவை இரண்டிற்கும் ஒரே முடிவுதான் கிடைக்கிறது: அது தான் கர்த்தரின் பழிவாங்குதல். நற்செய்திக்குக் கீழ்ப்படிகிறவன் இரட்சிக்கப்படுவான்; கீழ்ப்படியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று கிறிஸ்து கூறினார். (மாற்கு 16 : 16). இவை அனைத்தும் நமக்கு அறிவிப்பது, தங்கள் இரட்சிப்பை அலட்சியப்படுத்தும் எவரும் தப்பிக்க இயலாது என்பதையே. (எபி. 2 : 2–4 ).

**J.C. சோட்**

## *பிரிவினை கூடாது*

சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.
I கொரி 1 : 10

பெண்கள் பகுதி

# "சிருஷ்டிப்பின் ஒழுங்கும், அதின் வீழ்ச்சியும்"

கிறிஸ்தவர்களாகிய நாம் புதிய ஏற்பாட்டில் பதிவாகியுள்ள இயேசு கிறிஸ்துவின் சட்டத்திற்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த மக்களை கட்டுப்படுத்திய பழைய பிரமாணத்திலிருந்து வித்தியாசப்பட்ட புதிய பிரமாணத்தை தேவன் தன் பிள்ளைகளுக்காக ஏற்படுத்தி கொடுத்தார். இருப்பினும், சரித்திரப் பூர்வமாகப் பார்த்தால், முற்கால மனிதர்கள் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளால் நாம் பாதிக்கவேபட்டிருக்கிறோம் என்பது புரியும்.

தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபத்தில் பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலன் மூலமாக பெண்களுக்குண்டான சில வேலைகள், அவர்களுடைய் நடத்தைகள் பற்றிய போதனைகளை கட்டளையாகக் கொடுத்துள்ளார். இந்த கட்டளைகள் பழைய ஏற்பாட்டில் நடந்த சரித்திரப் பூர்வமான உண்மைகளின் விளைவே எனலாம்:

1. ஆதாம் முன்பு உருவாக்கப்பட்டான். பிறகு ஏவாள் உருவாக்கப்பட்டாள்.

2. ஏவாள் வஞ்சிக்கப்பட்டு, மீறுதலுக்கு உட்பட்டு மனுக்குலத்தின் வீழ்ச்சிக்கு காரணமானாள்.

**I கொரி : 11 : 8, 9, 11, 12 ஆகிய வசனப் பகுதிகளில்**

" புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள்"

"புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்"

"ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை"

"ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்தீரியினால் தோன்றுகிறான். சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது".

இந்த வசனப் பகுதிகள் நமக்கு எதை வலியுறுத்துகிறதென்றால், சிருஷ்டிப்பின் ஒழுங்கானது தேவனுக்கு ஆதியில் மாத்திரம் முக்கியமானதாகத் தோன்றாமல், தொடர்ந்து குடும்ப

அமைப்புத் திட்டத்திலும் ஒரு முக்கிய பங்கை ஆற்றவே செய்கிறது என்பதாகும். ஏனென்றால் மனிதன் முதலாவது உருவாக்கப்பட்டான். மனுஷியினுடைய தலையாக அவன் கருதப்படுகிறான்.

மனிதனுடைய எந்த ஒரு அமைப்புமே சீரான ஒழுக்கமில்லாமல் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. கட்டாயம் அதற்கு ஒரு அதிகாரம் வேண்டும். அந்த அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களுக்கு கீழ் இருப்பவர்களின் செயல்களுக்கு பொறுப்பாளிகளாக ஆக்கப்படுவார்கள். ஏனென்றால் மனிதன் முதலாவது சிருஷ்டிக்கப்பட்டு தலைமைத்துவத்துக்கு காரணமானான். **"தலைமைத்துவம்"** என்பது தன் மனைவிக்கு முன்பாகச் சென்று அவளை சரியான பாதையில் வழிநடத்திச் செல்வதாகும். "பொறுப்பு" என்பது தனக்கு கொடுக்கப்பட்ட தலைமைத்துவத்தால் சரியான பாதையில் வழிநடத்துகிறானா? அல்லது தவறான பாதையில் வழி நடத்துகிறானா? என்று தேவனுக்கு அவன் பதில் சொல்லியாக வேண்டும்.

வேறு வகையில் பார்த்தால், மனிதனுடைய "தலைமைத்துவம்", "பொறுப்பு" இவைகளெல்லாம் பெண்களை ஒரு முக்கியமற்றவர்களாக மாற்றிவிட முடியாது. எழுத்துப் பூர்வமாக அவள், "ஆணுக்காக சிருஷ்டிக்கப்பட்டவளாயிருந்தாலும்' பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதில் தாய் என்ற ஸ்தானத்தில் அவள் இல்லாமல் மனித சமுதாயத்தின் தொடர்ச்சியே இருந்திருக்காது. இந்த வகையில் ஆண், பெண் ஆகிய இருவரும் ஒருவரையொருவர் சார்ந்திருப்பது மாத்திரமல்ல, தேவனுடைய திட்டத்திலும் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றனர்.

தேவனுடைய சிருஷ்டிப்பின் கரத்திலிருந்து வரும்போது மனுக்குலமே பாவமில்லாமல் முழுமையடைந்திருந்தது. இருப்பினும் தெரிந்தெடுத்துக் கொள்ளக் கூடிய உரிமையை தேவன் அவர்களுக்கு கொடுத்திருந்தார். தேவன் சில சட்டங்களை உருவாக்கி, அவைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்பினார். அந்தக் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் போனதாலும், தெரிந்தெடுத்துக் கொள்ளும் உரிமைய தவறாக பயன்படுத்தியதாலும், அவர்கள் அந்த முழுமையடைந்திருந்த நிலையிலிருந்து விழுந்து, பாவிகளாக மாறினார்கள். பாவம் மரணத்தை பிறப்பிக்கும். ஆவிக்குரிய, சரீரப் பிரகாரமான மரணத்தை பிறப்பிக்கும் என்று தேவன் ஆதியிலேயே எச்சரித்திருந்தார்.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்

திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.

ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளை யிட்டார்''. (ஆதி 2 : 16, 17).

எனினும் சாத்தான் சர்ப்பத்தின் வடிவில் ஏவாளிடம் வந்து, "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" என்று கேட்டது.

ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து நாங்கள் தோட்டத்திலுள்ள விருட் சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன்; நீங்கள் சாகாத படிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்'' என்றாள்.

அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி; நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர் களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தாள். (ஆதி :33-6).

அப்போஸ்தலனாகிய பவுல் I தீமோத் : 2 : 14-ல் கூறியது போல ஏவாள் சர்ப்பத்தின் வார்த்தை களால் வஞ்சிக்கப்பட்டாள். சாத்தானின் வார்த்தைகளால் தேற்றப்பட்ட அவள் பாவத்தை இந்த உலகத்திற்குள் கொண்டு வந்து விட்டாள்.

தேவனால் திட்டமிடப்பட்ட சில குறிப்பிட்ட வேலைகளைச் செய்யவே ஸ்திரீயானவள் விசேஷ விதமாக படைக்கப்பட்டாள். தன் கணவனுக்கு உடன் வேலை யாளாகவும், தன் வீட்டையும், தான் ஈன்றெடுத்த மக்களையும் கட்டி காப்பதற்குமே தேவன் அவளைசிருஷ்டித்தார். (I தீமோத் 5 : 14, தீத்து : 2 : 4, 5) ஆகிய வசனப் பகுதிகளில் பெண்களுக் கென்று தேவன் குறித்த பணிகள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இந்த வசனப்பகுதிகளின்படி அவள் பிறரால் நம்பப்படு கிறவளாகவும், மற்றவர்களுக்கு இணைந்து கொடுக்கிறவளாகவும், தன் குடும்ப நலனில் கரிசனை யுள்ளவளாகவும் இருக்க வேண் டும். ஒருவேளை ஏவாளுக்குள் இருந்த இந்த குணங்கள், அவளை தேவனின் கட்டளைக்குக்

கீழ்ப்படியச் செய்யாமலும், தேவனிடத்திலிருந்து கிடைக்கும் நல்ல தருணத்தை இழக்கவும் செய்து, சாத்தானுக்கு செவி சாய்க்க வைத்திருக்கலாம். தவறான செய்கைக்கு தன்னை அடிமைப்படுத்திக் கொண்டாள். அவளது கீழ்ப்படியாமை மனித சமுதாயத்திற்கே கேட்டை சம்பாதித்து வைத்து விட்டது.

மேற்கண்ட இந்த சோக சம்பவத்தில், முதல் பெண்மணியானவளே **"தலைமைப் பொறுப்பை"** ஆணிடமிருந்து எடுத்துக் கொண்டு தன் கணவனையும் தன் வயப்படுத்திக் கொண்டதைப் பார்க்கிறோம். எந்த ஒரு கூட்டத்திலும் ஏவாள் அந்தக் கனியைப் புசிக்கலாமா? வேண்டாமா? என்ற கேள்வியையோ அல்லது ஆலோசனையையோ ஆதாமிடம் கேட்டதாகத் தெரியவில்லை. அதேபோல் ஆதாம் ஏவாளோடு கூட இருந்தும், தேவன் தன்னிடம் கூறிய கட்டளையை நன்கு அறிந்திருந்தும், அந்தக் கனியைப் புசிக்க வேண்டாம் என்று எந்த ஒரு கட்டத்திலும் வாய் திறந்து கூறவே இல்லை. தேவனின் அனந்த ஞானத்தால் உருவாக்கப்பட்டு, குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் கணவனின் நிலையை தலைகீழாக மாற்றி, பெரிய அழிவு என்ற திருப்பு முனைக்கு காரணமாகி, மனித இனத்திற்கே வீழ்ச்சியை உண்டாக்கிய இச்சம்பவம் நிச்சயமாக பரிதாபமான சம்பவம் என்றால் மிகையாகாது.

இதை வாசிக்கும் அருமைச் சகோதரிகளே! குடும்பத் தலைவிகளே!! தேவன் நமக்கு கொடுத்திருக்கும் குணங்களை வைத்து அவரின் திட்டத்தை நிறைவேற்றுகிறோமா? அல்லது அவைகளையே வைத்து குடும்பத்தையும், சபையையும், சமுதாயத்தையும் அழிக்க முயற்சிக்கிறோமா?

B.B. CHOATE R. R. NAYAGAM.

# வேதமே சத்தியம்

*உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன் நாள் முழுதும் அது என் தியானம்*

*நீர் உமது கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர் அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது.*

*உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால் எனக்கு போதித்தவர்களெல்லாரிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்.*

**சங்கீதம் 119 : 97-99**

# விசுவாசத்திலே வாழுதல்

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் . . . நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். "– (ரோமர் 1 : 17; 2 கொரி. 5 : 6).

உலகத்தைப் படைத்த தேவனின் வல்லமையைக் கண்டு நாம் ஆச்சரியப்படுகிறோம் : "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்". (ஆதி. 1 : 1) உலகத்தைப் படைக்க தேவனுக்கு நீண்டதோர் கட்டிட நிர்மாணத்திட்டம் எதுவும் தேவைப்படவில்லை. இதைப்பற்றி சங்கீதக்காரன் விளக்குகிறார் : "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தின்ால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" (சங். 33 : 6, 9). சில பொருட்களைக் கொண்டு நாம் கட்ட ஆரம்பிக்கிறோம்; பின் அவற்றை ஒழுங்கு படுத்தியும், மாற்றி அமைத்தும் நமக்குத் தேவைப்படும் விதத்தில் கட்டுகிறோம். ஆனால் தேவன் படைத்தார்; அதாவது ஒன்றுமில்லாமை யிலிருந்து அவர் சிலவற்றை உண்டாக்கினார்! "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம் "(எபிரேயர் 11 : 3). இப்படிப்பட்ட வல்லமை நமது சக்திக்கு அப்பாற்பட்டது. ஆனாலும் நாம் அவருக்காக வாழும் போது "விசுவாசத்தினாலே" அப்படிப்பட்ட வல்லமையை நாம் அடைய இயலும்.

"பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக என்றார் . . . தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார்," என ஆதியாகமம் 1 : 26 – 27 வசனங்களில் படிக்கிறோம். அப்போஸ்தலர் வியப்புடன் எழுதுகிறார் : "நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; ..." (1 யோவான் 3 : 1). நமது பிதா தேவனாக இருக்கிறார்; "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் "(சங். 33 : 9)! அவரு டைய பிள்ளைகளை அவர் நேசிக்கிறார்; (யோவான் 3:16), கிறிஸ்துவில் நமக்கு நிறைய வாக்குதத்தங்களைத் தருகிறார் (II கொரி. 1 : 20): அவர் வாக்கு மாறாதவர் (உபாகமம் 6 : 3). ஏனெனில் அவர் சொல்லுவதைச் செய்வார் : " . . . . . . . வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே . . . எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கை

யாயிருக்கிறேன் .... நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபி. 10 : 23; அப். 27 : 25; எபி : 13 : 5). நாம் அவருக்குச் சொந்தமானால் "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும்" தேவன் நமக்கு அளிக்கிறார். (2 பேதுரு 1 : 3). அதோடு, "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்." (எபே. 1 : 3). அவருக்காக நாம் வாழும் போது, நம்மை அவர் பாதுகாக்கிறார் என்பது மிகத் தெளிவு. "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8 : 31).

தேவன் நோவாவிடம் ஒரு பேழையை செய்யச் சொன்னார். அதை எவ்வாறு செய்ய வேண்டுமென்றும் சொல்லிக் கொடுத்தார். (ஆதி. 6). "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்புப் பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்". (எபி. 11 : 7). பேழையைச் செய்வதில், தேவனையும் அவரது வார்த்தையையும் நம்பி, நோவா "விசுவாசத்தில் வாழ்ந்தான்". கோலியாத்தை சந்திக்க தாவீது சென்றபோது, தனது விசுவாசத்தை அவன் கீழ்க்கண்டபடி வெளிப்படுத்தினான் : " . . . என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் . ." (1 சாமுவேல் 17 : 37). ஒரு பேழையை உருவாக்குவதிலும், வானிலை மாற்றங்களை அறிவதிலும் தனது சொந்த திறமையை நோவா நம்பவில்லை; அவன் தேவனை நம்பினான்; அந்த விசுவாசத்திலே வாழ்ந்தான். தாவீது தனது கவணையோ அல்லது அதைக் கையாளுவதில் அவனுடைய திறமையையோ நம்பவில்லை. தேவன் அவன் வழியாக கிரியை செய்வார் என அவன் தேவனை நம்பினான். தேவனை விசுவாசித்து, அவர் வழிநடத்துதலின்படி நடப்பதே இன்று விசுவாசத்திலே நாம் வாழுவதற்குச் செய்ய வேண்டிய காரியமாகும். சில காரியங்களைச் செய்யவும், வேறு சில காரியங்களைச் செய்ய வேண்டாமென்றும் தேவன் கூறுவதற்குள்ள காரணங்கள் அனைத்தையும் நாம் எப்போதும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை; நமக்குச் சிறந்தது எது என்று அவர் அறிவார் என்பதை நாம் நம்புவது மட்டும் போதுமானது. அப்படிச் செய்தால், அவருக்காக வாழ நமக்கு அவர் அதிகாரம் அளிக்கும் போது, அவருடைய வல்லமை நமது வாழ்வில் பிரதிபலிக்கும். "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப். 4 : 13) என நாம் பெருமையுடன் கூறமுடியும்.

**தமிழில் : எஸ். எஸ். ராஜன்.**

# தேவன் விரும்பும் தலைமையாளர் யார்?

நமக்கு எத்தன்மையான தலைமையாளர் தேவை? இந்தக் கேள்விதான் ஒரு இயக்கமானாலும் அமைப்பானாலும் அல்லது ஒரு குழுவானாலும் கேட்ககூடிய முதல் கேள்வியாகும். இதன் பொருள் என்னவெனில், ஒரு காரியத்தை சிறப்பாக முடிக்க வேண்டுமென்று எதிர் பார்த்தலாகும். ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல திறனுள்ள தலைமையாளரின் மதிப்பு எவ்வளவு என்று நன்றாகத் தெரியும்.

ஒரு வியாபார நோக்கிலுள்ள நிறுவனங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் அவைகளை நடத்தக் கூடிய தலைமையாளரைப் பொறுத்து அமையும். ஆகவேதான் அந்த நிறுவனங்களை லட்சக்கணக்கான ரூபாய்களை செலவழித்து, அந்த தலைமையாளர்களுக்கு பயிற்சியளிக்கின்றன. அனுபவபூர்வமாக அவர்களுக்குத் தெரியும். ஒரு நல்ல செயலாக்கமுள்ள அர்ப்பணிப்பான தலைமையாளர்களில்லை யெனில் நிறுவனத்தின் முன்னேற்றத்தைக் காணமுடியாது. வியாபாரரீதியாக தலைமையாளரை - மேலாளர் (Manager) என்று அழைக்கிறார்கள். யாரோ ஒருவர் சொன்னது "ஒவ்வொரு ஸ்தாபனமும் (or) நிறுவனமும் அதன் மேலாளரின் விரிவாக்கப்பட்ட நிழலே என்று.

ஆண்டவருடைய சபையிலும் இப்படிப்பட்ட தலைமையாளர்கள் தேவை தேவனால் ஏற்படுத்தப்பட்ட தலைமையாளர்களில் குறிப்பிடத்தக்கவர் மோசே. இவருக்கு விசேஷித்த ஆலோசனைகளும் உதவிகளும் தேவைப்பட்டது. யாத் 18-ம் அதிகாரத்தில் படிக்கிறோம், இவருடைய மாமன் எத்திரோ ஒரு கட்டத்தில் வந்து ஜனங்களின் மத்தியில் ஒரு தலைமைத்துவத்தை எப்படி ஏற்படுத்துவது என்று சில சிறந்த ஆலோசனைகளை கொடுக்கின்றார் வசனம் 21-ம் 22-ம் மோசேயினுடைய காலத்து சூழ்நிலைக்கேற்ப எப்படிப்பட்ட தலைமையாளர் தேவையென்பதை வெளிப்படுத்துகிறது கவனியுங்கள் ஆறு தகுதிகளைப் பெற்ற மக்களே மோசேயின் தலைமைப்பொறுப்பில் அவருக்கு உதவுகிறவர்களாக இருக்க வேண்டும். 1. தகுதியானவர்களாக இருக்க வேண்டும் 2. தேவனுக்கு பயந்த மனுஷர் 3. சத்தியம் நிறைந்தவர்கள் 4. பொருளாசையற்றவர்கள் 5. மேலான அதிகாரத்துக்கு கட்டுப்பட்டவர்கள் 6. பணியாற்ற ஆயத்தமுள்ளவர்கள். நாம் உடனடியாக இது பழைய ஏற்பாட்டுக் காரியம் நாம் புதிய ஏற்பாட்டின் கீழ் இருக்கிறோம். ஆகவே இது நமக்கு பொருந்தாது என்று சொல்லிவிடக்கூடாது. இந்த ஆறு காரியங்களையும், சற்று சுருக்கமாக

ஆராய்ந்து பார்ப்போம். முதலாவதாக தகுதியானவர்கள் (or) உண்மையானவர்கள் தம்மால் எது முடியாதோ அவைகளைச் செய்ய ஒருபோதும் முயலக்கூடாது. அப்படி முயற்சி செய்வது மிகவும் மோசமான ஒன்றாகும்.

பவுல் சொல்லும் போது, மூப்பர்களின் தகுதிகளில் ஒன்று, தன் சொந்தக் குடும்பத்தை நடத்தும் தகுதி தேவை. அப்படியில்லையெனில் சபையை நடத்த இயலாது (I தீமோ 3:5) தன் உடன் ஊழியனான தீமோத்தேயுவுக்கு எழுதும் போது “மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க தகுதியுள்ளவர்களிடம் ஒப்புவி” (II தீமோ 2:2) என்கிறார். எப்படி ஒருவன் தகுதியுள்ளவனாக மாற முடியும். வேத வசனங்கள் மாத்திரமே ஒருவனைத் தகுதிப்படுத்தும். தேவன் தகுதியானவர்களை எதிர்பார்க் கின்றார் அவர்களில் நீயும் ஒருவனாக இருக்க விரும்புகிறாயா?

இரண்டாவதாக தேவனுக்கு பயந்த மனிதனாக இருக்க வேண்டும் பயம் என்றால், பரிசுத்தமும் பயங்கரமும் நிறைந்த தேவனிடத்தில் மதிப்பும் மரியாதையும் கொண்டிருத்தல். ஒருவன் மெய்யாகவே தேவனுக்கு பயப்படவில்லையென்றால், அழிவும், தோல்வியும்தான் அதன் உற்பத்தியாக முடியும் (ரோமர் 2:10-18) பிரசங்கியாகிய ஞானி சொல்லுகிறார் தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளை கைக்கொள்” இதுவே எல்லா மனிதர் மேலும் விழுந்த கடமை. பிரசங்கி 12:13 தேவனுக்கு பயப்படும் ஒரு தலைமையாளர் பிற அங்கத்தினர்களையும் தேவனுக்கு பயப்படச் செய்ய முடியும் சபையின் பணிகளில் கர்த்தரின் சித்தத்தை கடைபிடிக்கச் செய்ய முடியும்.

மூன்றாவதாக சத்தியம் நிறைந்த ஒரு மனிதன் தலைமையாளன் சத்தியம் தெரிந்தவனாக இருக்க வேண்டும். சத்தியம் போதிக்கிறவனாக இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் சத்தியத்திற்காக நிற்பவனாக இருக்க வேண்டும். சத்தியத்தை கற்பவனாக இருக்க வேண்டும் அதை விற்பவனாக இருக்கக் கூடாது நீதி 23 தலைமையாளருக்கு சத்தியம் தெரியாத பட்சத்தில் பின்பற்றுபவன் வழிவிலகிப் போவதற்கு வாய்ப்புகள் உண்டு. (மத் 15:14)

நான்காவதாக பொருளாசையற்றவன் ஒவ்வொரு பாவமும் இந்த பொருளாசையின் காரணமாகவே செய்யப்படுகிறது. சிலர் இச்சித்து தங்கள் இருதயத்தை வேதனைப்படுத்திக் கொள்ளுகின்றனர் அநீதத்தின் கூலிக்காக ஆசைப்பட்டு, சத்தியத்திற்கு விரோதமாக கள்ள உபதேசத்தைப் போதிப்பதும் அதற்கு தங்களை விற்று போடுவதும் எங்கும் காணப்படுகிறது.

ஐந்தாவதாக அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டவரும் பணியாற்றுபவரும் இது மோசேயின் பொருந்தவறுகளில் ஒன்று, எல்லாக் காரியத்தையும் தான் ஒருவனே பார்க்கவேண்டுமென்று எண்ணினார் எவ்வளவு பலமிருந்தாலும் எவ்வளவு திறமையிருந்தாலும் தனிமையாக நின்று என்ன செய்யக்கூடும் பணிகளை பகிர்ந்து கொடுக்க வேண்டும் அப்பணிகளை செம்மையாகச் செய்வதற்குரிய பயிற்சியை இவர் அவர்களுக்கு கொடுத்திருக்க வேண்டும்.

ஆறாவதாக, ஒரு தலைமையாளர் எப்பொழுதும் கிடைப்பவராக இருக்கவேண்டும். காணாமல் போனவராக இருக்க கூடாது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட தேவைகளையும் உதவிகளையும் செய்ய எப்பொழுதும் ஆயத்தமுள்ளவராக இருக்க வேண்டும். கர்த்தருடைய சபையில், ஒரு சகோதரன், ஒரு காரியத்தை செய்து முடிக்க அவனுக்கு உதவி செய்ய வேண்டும்.

இந்த பேருண்மைகளிலிருந்து தேவனுடைய திட்டப் பணியில் 1.உருவப்படுத்தும் தலைவனுக்கும் 2. ஏதேச்சதிகாரத் தலைவனுக்கும் 3.ஒழுக்கமற்ற தலைவனுக்கும் 4. இரண்டாம் பட்சத் தலைவனுக்கும் 5."பேர்" மட்டும் விளங்கும் தலைவனுக்கும் 6. வெறும் கையெழுத்து போடும் காணாமல் போன தலைவனுக்கும் இடமேயில்லை என்பது தெளிவாகிறது.

"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும் படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது.

நம்மை நாம் ஒரு மகத்தான திட்டப் பணிக்காக ஒப்புக் கொடுத்து ஆயத்தப்படுவோம்.

இந்த உலகத்தின் மாபெரும் சேவைக்காக, சிறந்த ஒன்றை அர்ப்பணிப்போம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**J.J. TURNER** **தமிழில் : வே. தானியேல் துரைராஜன்.**

ராக்சிட்டி கிறிஸ்துவின் சபை,

திருச்சி.

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

கிறிஸ்து சரீரத்தில் உயிர்த்தெழுந்தார் அதுபோல் நாமும் சரீரத்தில் உயிர்த்தெழுவோம்: இங்குள்ள ஆங்கில சபை குருவானவர் இயேசு மரிக்கவில்லை மயக்கம் அடைந்தார் மயக்கம் தெளிந்தார் என்று போதித்தால் அவருடைய குரு பட்டத்தை எடுத்துவிட்டார்கள்; கிறிஸ்து சபையிலும் சிலர் கிறிஸ்து சரீரத்தில் உயிர்த்தெழவில்லை ஆவியில் உயிர்த்தெழுந்தார் என்று போதிக்கிறார்கள் : யாருடைய கூற்றையும் நாம் நம்பவேண்டும் வேதவசனம் என்ன சொல்லுகிறதோ அதுதான் உண்மை அப்போஸ்தலனாகிய மத்தேயு தான் எழுதிய சுவிசேஷத்தில் இவ்வாறு எழுதுகிறார். மத்தேயு 28.8–9 ஓய்வுநாள் முடிந்து வாரத்தின் முதல் (ஞாயிற்றுக் கிழமை) விடிந்து வருகையில் மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். கர்த்தருடைய தூதன் வாசலிலிருந்த கல்லை புரட்டித் தள்ளி அதின் மேல் உட்கார்ந்தான். தூதன் அந்த ஸ்திரிகளை நோக்கி, நீங்கள் பயப்பட வேண்டாம். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை தேடுகிறீர்கள். அவர் இங்கே இல்லை தாம் சொன்னபடி உயிர்த்தெழுந்தார். கர்த்தரை வைத்த இடத்தை பாருங்கள் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் நீங்கள் போய் சீஷர்களுக்குச் சொல்லுங்கள் அவர்கள் அறிவிக்கப் போகிறது போது இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு வாழ்க என்றார் : அவர்கள் கிட்ட வந்து அவர் பாதங்களைத் தழுவி அவரைப் பணிந்து கொண்டார்கள். சரீரம் இல்லா விட்டால் பாதத்தை தழுவ முடியாது.

மாற்கு (சீஷன்) எழுதிய சவிசேஷத்தில் அவர் என்ன எழுதியிருக்கிறார் என்று காண்போம் மாற்கு 16. 1–6 ஓய்வு நாளான பின்பு மகதலேனா மரியாளும், யாக்கோவின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் வாரத்தின் முதலாம் நாள் கல்லறையினிடத்தில் வந்தார்கள். கல் தள்ளப்பட்டிருப்பதைக் கண்டார்கள் : அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து அங்கே ஒரு வாலிபனைக் கண்டு பயந்தார்கள். அவன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள் சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவை தேடுகிறீர்கள் அவர் உயிர்த்தெழுந்தார் அவர் இங்கே இல்லை இதோ அவரை வைத்த இடம். நீங்கள் போய் சீஷரிடம் சொல்லுங்கள். இயேசுவுக்கு பிரியமான வைத்தியரான லூக்கா தான் எழுதிய சுவிசேஷத்தில் இவ்வாறு எழுதுகிறார்.

லூக்கா 24. 1-6, 36-43. வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில் சுகந்த வர்க்கம் இட சில ஸ்திரிகள் வந்தார்கள். கல்லறையை அடைந்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு உள்ளே பிரவேசித்து கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல் கலக்க மடைந்திருக்கையில் பிரகாசமுள்ள இரண்டு பேரைக் கண்டார்கள். அந்த இரண்டு பேரும் அவர்களை நோக்கி உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுவதென்ன? அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார். அவர்கள் கல்லறையை விட்டு திரும்பிப்போய் பதினொரு பேருக்கும் மற்றவர்களுக்கும் அறிவித்தார்கள். பேதுருவோ கல்லறைக்கு ஓடிப்போய் குனிந்து பார்த்தான் சீலைகள் தனிப்படவைத்திருக்க கண்டு ஆச்சரியப்பட்டான். அன்றைய தினம் எம்மாவு என்னும் கிராமத்திற்கு போன சீஷர் இருவரும் கிறிஸ்துவைக் கண்டார்கள். கண்டதை அந்த இருசீஷர்களும் திரும்ப எருசலேமுக்கு வந்து மற்றவர்களிடம் சொன்னார்கள். அன்று யாவரும் கிறிஸ்துவைக் கண்டார்கள். கண்டு கலங்கி பயந்து ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள் : கிறிஸ்துவோ நான் தான் என்று அறியும்படி என் கைகளையும் கால்களையும் பாருங்கள் என்னைத் தொட்டுப் பாருங்கள் நீங்கள் காண்கிறபடி எனக்கு மாம்சமும், எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில் புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார். அப்பொழுது பொரித்த மீன் கண்டத்தையும் தேன் கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்தார் ஆவியின் பிரகாரமான சரீரமாயிருந்தால் தொட முடியாது புசிக்கவும் முடியாது : ஆகவே அவர் சரீரத்தில் உயிர்த்தெழுந்தார். கிறிஸ்துவுக்கு அன்பான சீஷன் அப்போஸ்தலன் தன் சுவிசேஷத்தில் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

யோவான் 20. 1-16, 19, 20, 24- 28. வாரத்தின் முதல் நாள் காலையில் அதிக இருட்டோடே மகதலேனா கல்லறையினிடத்திற்கு வந்து, கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்க கண்டாள். உடனே அவள் ஓடி சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷரிடத்திலும் போய் கர்த்தரை கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள் என்றாள். பேதுருவும், யோவானும் ஓடி கல்லறையினிடத்தில் வந்து சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுத்தியிருந்த சீலை மற்றச்

சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்தில் சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டார்கள். பின்பு தங்கள் இடத்திற்கு போய் விட்டார்கள். மரியாள் கல்லறையின் அருகே நின்று அழுது கொண்டிருந்தாள் பின்னர் அவன் குனிந்து கல்லறையைப் பார்த்தாள் அங்கே இரண்டு தூதர்கள் உட்காந்திருதைக் கண்டாள். அவர்கள் ஸ்திரியே ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள் என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள் என்றாள். இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி இயேசு நிற்கிறதைக் கண்டாள். மகதலேனா மரியாள் போய் கர்த்தரைக் கண்டதையும் அவர் அவளுடன் பேசியதையும் சொன்னாள் அன்று சாயங்கால வேளையில் சீஷர்கள் கூடியிருந்த பூட்டிய வீட்டிற்குள் இயேசு வந்து நடுவே நின்றார். அவர் தம்முடைய கைகளையும், விலாவையும் அவர்களுக்கு காண்பித்தார். இயேசு வந்திருந்த சமயம் தோமா அவர்களுடனேகூட இருக்கவில்லை சீஷர்கள் கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன் அவருடைய கைகளில் ஆணிகளாலுண்டான காயத்தை நான் கண்டு அந்தக் காயத்திலே என் விரலையிட்டு என் கையை அவருடைய விலாவிலேபோட்டயொழிய நான் விசுவாசிக்கமாட்டேன் என்றான். மறுபடியும் எட்டு நாளைக்கு பின்பு யாவரும் இருக்கையில் இயேசு வந்து நடுவே நின்று தோமாவை நோக்கி நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப்பார் உன் கையை நீட்டி என் விலாவிலே போடு என்றார். தோமா கண்டு விசுவாசித்தான் இதன் பின்பு திபேரியா கடற்கரையில் தம்மை வெளிப்படுத்தினார். பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்று கேட்டார். அவர்கள் ஒன்றும் இல்லை என்றார்கள். கரையிலே கரி நெருப்பு போட்டிருக்கிறதையும் அதின் மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள். இயேசு அப்பத்தையும் மீனையும் எடுத்து அவர்களுக்கு கொடுத்தார் : புசிக்கிறதற்கு ஏதாவது உண்டா? என்று கேட்டார் ஆனால் இங்கே அவர் புசித்தாகச் சொல்லப்படவில்லை.

**S.M. ஞானம்**
**மலேசியா**

# 6. பிரசங்கியின் பிரசங்க ஒழுங்கு

பிரசங்கத்துக்கு ஒழுங்கு ஒரு முக்கியமான இலக்கணம் நன்றாய் ஒழுங்கு செய்யப்பட்ட பிரசங்கத்தை ஒரு கோபுர மாளிகைக்கு ஒப்பிடலாம். நமது பிரசங்க ஒழுங்குடன் நேர்த்தியாகக் கட்டப்பட வேண்டும். பிரசங்கத்தில் முன்னுரை, பொருள், செய்தி முடிவுரை என நான்கு உருப்புகள் இருக்கின்றன. இவைகளால் பொருளும், செய்தியும் முக்கிய பாகங்களாகும். இவை இரண்டும் பிரசங்கத்தின் இரண்டு கண்களாகும் இருப்பினும் பிரசங்கம் நான்கு உருப்புகளாகக் கொண்டிருக்க வேண்டும்.

(1) **முன்னுரை :** இது முன்னுரை தான் செய்தி அல்ல! ஜனங்கள் பிரசங்கப் பொருளை கவனித்துக் கேட்க அவர்களை ஆயத்தம் செய்வதே முன்னுரையின் நோக்கமாகும். இது தொடக்கவுரைதான் பேருரை அல்ல. ஐந்து நிமிடத்தில் முன்னுரையை முடித்துவிட வேண்டும். சிலர் முன்னுரையை தொடங்குவார்கள் சீக்கிரம் பொருளுக்கு வரமாட்டார்கள் கேட்பவர்கள் முன்னுரையா? செய்தியா? என குழப்பப்பட்டுத்தான் அமர்ந்திருப்பார்கள். ஆகவே முன்னுரை ஐந்து நிமிடத்திற்கு மேல் இருக்கக்கூடாது. சீக்கிரமாக தனது பிரசங்கப் பொருளுக்குச் செல்ல வேண்டும். சிலர் முன்னுரையை எப்படித் துவங்குவது? என்று விழித்துக் கொண்டு நேரத்தை வீணாகக் கழித்துக் கொண்டு நிற்பார்கள். இவ்வாறு காலதாமதம் செய்யாமல் சபையினருக்கு வாழ்த்துக்களைக் கூறி உற்சாகமாகப் பேசி முன்னுரையை துவக்கி முடிக்க வேண்டும்.

(2) **பொருள் :** பிரசங்கத்தில் விளக்கக் கூறப்போகும் சத்தியமே பொருளாகும். இப்பாகத்தை மிகச் சுருக்கமாகவும் சிறப்பாகவும் சொல்ல வேண்டும். பிரசங்கி எந்த தலைப்பில் பேசப் போகிறார் என்பதைக் காட்டும் பாகம் இது. எனவே பிரசங்கத்தின் பொருளை இந்தப் பகுதியில் சொல்லி விட வேண்டும். சொல்வதை மிகவும் தைரியத்தோடு அழுத்தமாகக் கூறவேண்டும். தைரியத்துடன் சத்தியத்தைக் கூறும்பொழுது கேட்கிறவர்கள் மிகவும் கவனமாகவும், ஆச்சரியத்துடனும் அமர்ந்திருக்கச் செய்யும் பாகும் இது. நம் ஆண்டவர் இயேசுவும், அப்போஸ்தலரும் மிக தைரியமாகப் பேசினார்கள். (மத் 7: 28, 29, அப் 5: 40-42) நாமும் இவ்வாறே தைரியமாகப் பேசவேண்டும். நன்றாக ஆரம்பித்தால் நன்றாக முடியும். நன்றாக ஆரம்பிக்கும் பகுதி இது.

3. **செய்தி :** பிரசங்கத்தின் முக்கிய பாகம் இது. பிரசங்கி தான் தெரிந்து கொண்டு பிரசங்கிக்கப் போகும் பாகம். பிரசங்கியின் முழு திறமையும் இப்பகுதி வெளிப்படுத்தும். எனவே பிரசங்கி பேசப் போகின்ற பொருளை தெளிவாய் கூறுவதோடு மட்டும்மலாமல் அதைத் தகுந்த

வேதவசனத்தோடு கோர்வையாகக் கூற வேண்டும். இந்த பாகத்தில் செய்தியின் பொருளை மூன்று அல்லது நான்கு வகுப்புகளாகப் பிரித்து விரிவாகப் பிரசங்கிக்கலாம். உதாரணமாக சுவிசேஷம் என்ற பொருளில் மூன்று வகுப்புகளை இங்கே காணலாம். 1. சுவிசேஷம் என்றால் என்ன? 2. சுவிசேஷத்தினால் வரும் ஆசீர்வாதம் என்ன? 3. சுவிசேஷத்திற்கு கீழ்படிய என்ன செய்ய வேண்டும்? இப்படி வகுப்புகளாக பிரித்து ஒவ்வொன்றாய் விளக்கிக் கூற வேண்டும். இவ்வாறு வகுப்புக்களாகப் படும் போது பிரசங்கத்திற்கு புதுப்புது பெலன் கிடைக்கிறது. (அசைவு)

பிரசங்கத்தின் ஒவ்வொரு வகுப்பும் (பிரிவும்) ஒன்றுக்கொன்று வித்தியாசமானதாகக் காட்டவேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு நியாயங்கள் இருக்க வேண்டும். செய்தி பாகத்தில் எத்தனை வகுப்புகள் (பிரிவுகள்) இருக்க வேண்டும் என்று திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். ஒரு செய்தி பாகத்தில் மூன்றுக்கும் குறையாமல், ஐந்துக்கும் மேற்படாமல் பிரிவுகள் இருந்தால் போதும். கேட்போரைக் கவர்ந்து கொள்ளவும், நேரம் போவது தெரியாமல் கவனிக்கவும், பாராட்டுக்களைப் பெறவும் மூன்று பிரிவுகளாக வகுத்து பிரசங்கிப்பதே மேலானதாகும். செய்தி பாகத்தில் இருக்கும் பிரதான வகுப்புகள் (பிரிவுகள்) ஒவ்வொன்றும் பிரசங்கப் பொருளை நிலை நிறுத்தத்தக்க பலமுள்ளதாய் புதுப் புது நியாயங்கள் அடங்கி உள்ளதாக இருக்க வேண்டும்.

பிரசங்கத்தில் நேரம் முக்கியமானது ஒரு பிரசங்கத்தை நன்றாக திருத்தமாக அழுத்தமாக, ஆழமாகக் கூற முப்பது நிமிடம் போதுமானது. முப்பது நிமிடத்தில் முடியாத பிரசங்கம் பெரும் அலுப்பும், முடிப்பதற்கு அவதியுமாயிருக்கும். ஆகவே சகோதரரே இந்த பாகம் முப்பது நிமிடத்தில் முடிக்க வேண்டும். முன்னுரைக்கும், முடிவுரைக்கும் பத்து நிமிடங்கள், செய்தி முப்பது நிமிடங்கள் ஆக மொத்தம் நாற்பது நிமிடத்தில் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு பிரசங்கப் பீடத்திலிருந்து இறங்கிவிட வேண்டும். இல்லையென்றால் கேட்பவர்களின் அவதியினால் அவசரமாக இறங்க வேண்டிய நிலை நேரிடும்.

(4) **முடிவுரை :** குணப்பட்டவர், குணப்படாதவர் இரு வகுப்பினரையும் பார்த்து புத்திமதி முடிப்பதே முடிவுரை. பிரசங்கி தான் பிரசங்கித்தப் பொருளை மீண்டுமாக நினைவுபடுத்தி புத்திமதி கூறவேண்டும். முடிவுரையானது புத்தமதிகளாக இருக்கலாம் ஆனாலும் மிக, மிக சுருக்கமாக ஐந்தே நிமிடத்திற்குள் கூறி இறங்கிவிட வேண்டும். புத்திமதி நீண்டுவிடுமாகில் கேட்போருக்கு அலுப்பும், வெறுப்பும் அதிகமாகி செய்தி பொருளை இழந்து விடுவார்கள். ஆகவே முடிவுரை முடித்துவிடு!பிரசங்க விஸ்தரிப்பை ஆயத்தப்படுத்துவதற்கு முன் மேற்சொல்லிய ஒழுங்கின்படி அதை வகுத்துக் கொள்ள வேண்டும். இதுவே சிறந்த பிரசங்கத்திற்கு வழி முறையாகும்.

**K. பாஸ்கர்,** அருவங்காடு.

# II. தெசலோனிக்கேயர் 5 : 14

I தெச. 5:14ல் நான்கு விதமான கருத்துக்களை அப்போஸ் தலனாகிய பவுல் சொல்லுகிறதை நாம் பார்க்க முடிகிறது. இந்த நான்கு கருத்துக்களும் இன்றைய கிறிஸ்துவர்களாகிய நமக்கு உலகப் பிரகாரமான வாழ்க்கைக்கும் சரி, ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் சரி, மிகவும் அவசியமானதாய் இருக்கிறது. நாம் வேத வசனங்களை தினந்தோறும் படிப்பதோடு நிறுத்திவிடாமல், நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவோமானால், நம்முடைய வாழ்க்கையிலே அனேக ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்பது உண்மை. நாம் இப்பொழுது வசனம் பதினான்கை தியானத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

**1. ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள்**

ஒழுங்கில்லாதவர்களுக்கு யார் புத்தி சொல்வது? இந்த புத்தி சொல்லுகிற நபர் முதலாவது ஒழுக்கமுள்ளவராயும் பொறுமையுள்ள வராயும் இருக்க வேண்டும். பெரியோர் முதல் சிறியோர் வரை எப்படி புத்தி சொல்ல வேண்டும் என்பதைக் குறித்து பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்வதை கேளுங்கள். (2 தீமோ 4 : 2) சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு. மீண்டும் தொடருகிறார். எச்சரித்துப் புத்தி சொல்லு என்கிறார். (2 தீமோ 2.14) ஏன், புத்தி சொல்ல வேண்டும்? ஏனென்றால் அவைகள் (2 தீமோ 3 : 17) உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது என்று முடிக்கிறார்.

கொரிந்து சபையாருக்குப் பவுல் சொல்லும் புத்திமதியை கேளுங்கள். சகோதரரே நீங்கள் எல்லோரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் (I கொரி 1 : 10) வச. 12ல் பார்க்கிறோம். கொரிந்து சபையிலே பிரிவினைகள் பிரச்சனைகள் உருவானது என்று பார்க்கிறோம்.

பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது அவர்கள் தேவனை அறியாத காலத்தில் எப்படி இருந்தார்கள் என்பதையும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் வந்தும் மீண்டும் பழைய சுபாவத்திற்குள் இருப்பதையும் கண்டித்து புத்தி சொல்லுகிறார். (கலா. 4 : 8 –9) ஒழுங்கற்று திரிபவர்களையும், வேலை செய்யாமல் சாப்பிடுபவர்களையும் இயேசுவின் நாமத்தில் கட்டளையிட்டு புத்தி சொல்லுகிறார். (2 தெச 3 : 11 –15 பார்க்க)

## 2. திடனற்றவர்களைத் தேற்றுங்கள் :

யாக்கோபு கூறுகிறார் (யா 1 : 18 – 22) அவர் நம்மை சத்திய வசனத்தினாலே மறுபடியும் ஜெனிப்பித்தார் (பிறக்கச் செய்தார்) அப்படிப் பிறந்த நாம் திடனாய் வளரவேண்டுமானால் புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனம் என்னும் களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் நாம் வாஞ்சையாயிருக்க வேண்டும் என்கிறார். பேதுரு (I பேதுரு. 1:14–16 2:2–3 பார்க்க) பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதுகிறார். நீங்கள் பெலனற்றவர்கள், குழந்தைகள் மாம்சத்துக்குட் பட்டவர்கள், திடனற்றவர்கள் என்று சொல்லுகிரார். I கொரி 3 : 1–2–3 பார்க்க. இப்படியாய் அவர்களை தேற்றுகிறார் பவுல், ஆகவே அவர்களை மேலும் தேற்றும்படியாக திடப்படுத்தும்படியாக அவர்களை உற்சாகப்படுத்துகிறார் பவுல். இவ்விதமாக (எபே. 2 : 19–20–21–22) ஆகையால் நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாரு மாயிருந்து அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டி கட்டப்பட்டு வருகிறீர்கள் என்று முடிக்கிறார்.

## 3. பலவீனரைத் தாங்குங்கள் :

வேதாகமத்தின் போதனையே ஆவிக்குரியது (மறுமைக்குரியது) சரீரத்திற்குரியதல்ல. ஆவிக்குரிய வாழ்க்கையை நாம் நடைமுறை படுத்துவோமானால் சரீரத்திற்குரிய வாழ்க்கையும் ஒழுக்கமுள்ளதாய் அமைந்துவிடும் என்பதே வேதவசனத்தின் அடிப்படை.

விசுவாசத்தில் பலவீன்முள்ளவனைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், ரோ 14 : 1. 15 : 1ல் அன்றியும் பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே

பிரியமாய் நடவாமல் பலவீனருடைய பலவீனங்களை தாங்க வேண்டும் என்கிறார் பவுல். 14ம் அதிகாரம் முழுவதும் இந்த பலவீனரைக் குறித்தும், இந்த பலவீனரை எப்படித் தாங்க வேண்டும் என்றும் அப்படி தாங்காவிடில் அந்த பலவீனர்கள் விழுந்து விடுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்றும் திட்டவட்டமாக கூறுகிறார் (ரோ 14.21) எபி 5 : 1 –13 வசனப் பகுதிகளை தியானிக்கும் பொழுது மாம்சத்துக்கு உட்பட்டவன் பலவீனமுள்ளவன். இவன் மனுஷரால் தெரிந்துக் கொள்ளப்பட்ட பிரதான ஆசாரியன் என்றும் சொல்லப்படுகிறது.

**வச. 12 -13ஐ வாசிக்கவும்.**

நாங்கள் பலமுள்ளவர்கள் என்கிறார் பவுல். எங்களுடைய பலம் அரண்களை நிர்மூலமாக்கிற தேவ பலம் என்கிறார். 2 கொரி 10:4, I இரா.19:1 முதல் 9 முடிய வாசிக்கும் போது அங்கே எலியா தீர்க்க தரிசிகள் கொலை செய்யப்பட்டதை அறிந்து அவன் பிரயாணமாய் சென்று கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் என்று சொல்லி ஒரு சூரைச் செடியின் கீழ்படுத்துக் கொண்டு நித்திரை பண்ணினான். அப்பொழுது தூதன் மூலம் எலியாவுக்கு போஜனம் கொடுத்து பலப்படுத்தினான். அவன் போஜனத்தின் பலத்தினாலே நாற்பது நாள் இரவும் பகலும் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதம் மட்டும் நடந்தே சென்றான். அது போல பலவீனமுள்ள சகோதரர்கள் சோர்ந்து போகும் பொழுது விசுவாசத்தில் பலமுள்ள சகோதரர்கள் அவர்களை வேதவசனத்தின் மூலம் அவர்களைப் பலப்படுத்தி தாங்க வேண்டும்.

பவுலின் புத்திமதியையும், கண்டிப்பையும் கடிந்து கொள்ளுதலையும் கொரிந்து சபையார் ஏற்றுக் கொண்டு மனமாற்றமடைந்து விசுவாசத்தில் பலப்பட்டார்கள். 2 கொரி 7 : 6–7.

**4. எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள் :**

இந்த நீடிய சாந்தம் எல்லோரிடத்திலும் இருக்கிறதா? என்றால் அது மிகவும் குறைவே. ஆனால் நமது ஆண்டவர் சொல்லுகிறார் மத் 11:29ல் நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார். பேதுரு தொடருகிறார். கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள். உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். (1 பே. 3 : 15)

அது மாத்திரமல்ல. தன் கிரியைகளை சாந்தத்தோடு நல்ல நடக்கையினாலே காண்பிக்கக் கடவன். குற்றத்தில் அகப்பட்டவர்களை சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களை சரிசெய்ய வேண்டும் (கலா 6 : 1 –2) கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மில் இருக்க வேண்டும். (பிலி 2 : 5) பேதுரு சொல்வதை கேளுங்கள். நீங்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் கீழ்படிந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் (I பேதுரு. 5 : 5) ஏனென்றால் கிறிஸ்து தன்னை கொலை செய்யப் போகும் எதிரிகள் கேட்ட கேள்விகளுக்கு சாந்தத்தோடு பதில் சொன்னார். நாங்கள் கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவின் பிரமாணங்களை கைக்கொள்ளுகிறோம் என்று சொல்பவர்கள் கிறிஸ்துவை போல நடந்து கொள்ளுகிறோமா? என்றால் அது சந்தேகமே. நாம் எப்பொழுதும் கிறிஸ்துவையே நோக்கிப் பார்ப்பவர்களாக இருக்க வேண்டும். அவருடைய சிந்தை நம்மில் இருக்கும்பொழுது நாம் எல்லோரிடத்திலும் சாந்தத்தோடும் தாழ்மையோடும் பொறுமையோடும், அன்போடும் நடந்து கொள்ளமுடியும். இவைகள் நம்மிடத்தில் வெளிப்பட வேண்டுமானால் நாம் ஜெபத்தோடு தேவனிடத்தில் கேட்கும்பொழுது அவர் நமக்கு நிச்சயமாக தருவார்.

*யோசுவா செல்வம்*
*அரக்கோணம்.*

# வாசகர்கள் கவனத்திற்கு

**விலாசம் மாறும் போது, உங்கள் பழைய முகவரியையும், மாறிச் செல்லும் புதிய முகவரியையும் சேர்த்து எழுதுவது அவசியம்.**

**புதிதாக இதழ் வேண்டுவோர் உங்கள் தெளிவான முகவரியுடன் அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் மாவட்டத்தின் பெயரையும் குறிப்பிட வேண்டுகிறேன்.**

**ஆசிரியர்**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/O PP/5
Posted at Erode HPO on 20, ஜூன்-1997
ஜூன்- THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி:-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ் " வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor Phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
Post Box No: 27 KANGAYAM - 638 701

PRINTED MATTER BOOK-POST